பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 23 | வெள்ளிக்கிழமை | 06.02.2026 | அதிர்வு 190

## வடக்கு - கிழக்கில் கரிநாள் பேரணிக்கு எதிராக மஹிந்த அணி போர்க்கொடி!



இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத் தன்று வடக்கு, கிழக்கில் கரிநாள் அனுஷ்டிக்கப் பட்டு பேரணி 06



# தமிழர்களின் மொழியுரிமைய அடியோடு மறுக்கின்றது அரசு

## வெலிஓயா ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம் அதற்குச் சரியான சான்று என்கிறார் சுமந்திரன்

(ந.லோகதயாளன்)

'மொழி உரிமை முக்கியமானது, முக்கியமானது, ஒவ்வொருவரும் தங்கள் மொழியில் பேசும் உரிமை இருக்கின்றது' என ஜனாதிபதி திரும்பத் திரும்பக் கூறுகின்றார். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை. இதற்கு மணலாறு (வெலிஓயா) உதாரணம். இவர்கள் சொல்வது ஒன்று, செய்வது ஒன்றாக வுள்ளது. மிக முக்கியமானது மொழி உரிமை எனச் சொல்லிக்கொண்டு அந்த மொழி உரிமை மறுக்கப்படுகின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06

# வெறுப்புணர்வைத் தூண்டும் விதத்திலான கருத்துக்களை வவுனியா வடக்குத் தவிசாளர் திரிவுபடுத்திக் கூறுகின்றார்

## பிரதி அமைச்சர் உபாலி மறுப்புக் குற்றச்சாட்டு

(வவுனியா நிருபர்)

"வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் திரிவுபடுத்தி வெறுப்புணர்வை தூண்டும் விதமாக தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். எனவே நடந்த சம்பவம் தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு ஆளுநருக்கு நான் கோரிக்கை விடுத்துள்ளேன்."

– இவ்வாறு கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன் போது கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணவேணி தாம் பிரதி அமைச்சர் உபாலி 05






நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று தமிழரசுக் கட்சியின் முக்கிய கூட்டமென்று நடைபெற்றது. கட்சியின் எட்டு எம்.பிக்களில் சிறிதரனைத் தவிர மற்ற ஏழு பேரும் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கும் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பே நேற்று இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் செயலாளர் என்ற முறையில் எஸ்.குகதாசன் இந்தக் கூட்டத்துக்கு ஒழுங்கு செய்திருந்தார் எனத் தெரிகிறது.

நாடாளுமன்றக் குழு இதற்கு முன்னர் இதே போன்று தமது குழுவின் ஒரு சக உறுப்பினரான சிறிதரனுடன் இத்தகைய சந்திப்பு ஒன்றை சில தினங்களுக்கு முன்னர் நடத்தி இருந்ததாகக் கூறப்படுகிறது. அந்தச் சந்திப்பில் சாணக்கியன் எம்.பி. கலந்து கொள்ளவில்லை.

அடுத்த கட்டக் கூட்டமே நேற்று நடைபெற்றிருக்கின்றது. 06

# என்.பி.பியில் தனிநபர் ஆதிக்கம் இல்லை! கலந்துரையாடல்களிலேயே தீர்மானங்கள!!

## புதுடில்லி பறக்க முன் ரில்வின் சில்வா தெரிவிப்பு




“தேசிய மக்கள் சக்தி அரசுக்குள் என்.பி.பி. தனி நபர் ஆதிக்கம் இல்லை. உரிய வகையில் கலந்துரையாடி கூட்டுப் பொறுப்புடனேயே முடிவுகள் எடுக்கப்படுகின்றன.”

– இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

நேற்று புதுடில்லிக்குச் செல்வதற்கு முன்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“தேசிய மக்கள் சக்தி அரசைப் பெலவத்தையில் நீங்கள் இயக்குவதாகக் கூறப்படுகின்றது. நீங்கள்தான் உத்தியோகபூர்வமற்ற ஜனாதிபதி என்ற விமர்சனமும் எதிரணியால் முன்வைக்கப்படுகின்றதே...” என்று ரில்வின் சில்வாவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர் கூறியவை வருமாறு:-

“நான் உத்தியோகபூர்வமற்ற ஜனாதிபதி அல்லன். நான் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் மட்டுமே.

நான் எவருக்கும் அழுத்தம் பிரயோகிப்பது கிடையாது. அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுப்பது இல்லை.

ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பவற்றின் தலைமையகம் பெலவத்தையில்தான் உள்ளது.

ஆட்சி அமைப்பதற்கு முன்னரும் நாம் அங்கிருந்துதான் முடிவுகளை எடுப்போம். தற்போதும் அங்கிருந்து கலந்துரையாடுவோம்.

அமைச்சரவையில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் உரிய இடத்தில் எடுக்கப்படும். எமது கட்சித் தலைமையகத்தில் கருத்தாடல் இடம்பெறும்.

பல யோசனைகள் வரும், அது பற்றி ஆராயப்பட்டுப் பெரும்பாலானோரின் தேர்வு ஏற்கப்படும்.

எனவே, பெலவத்தையில் கலந்துரையாடல் இடம்பெறும். ஆனால் பெலவத்தையில் இருந்து கொண்டு ஒருவர் இயக்குகின்றார் எனக் கூறப்படுவது தவறு.

ஏனைய கட்சிகளைப் போல் தனிநபர் செல்வாக்கு செலுத்தும் கட்சி அல்ல எமது கட்சி. நாம் என்ற சிந்தனை அடிப்படையிலேயே செயற்படுகின்றோம். எம்மிடையே கூட்டுப் பொறுப்பு உள்ளது.

தனிநபர் ஆதிக்கம் செலுத்தும் கட்சிகளுக்கு எமது அரசியல் கலாசாரத்தைப் புரிந்துகொள்வது கடினம்.” – என்றார்.

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கு சாணக்கியன் தனிநபர் சட்ட மூலம் சமர்ப்பிப்பு




பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கான தனிநபர் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கையில் நீண்ட காலமாக நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் எதிரானதாக இருப்பதாகச் சுட்டிக்காட்டி, அதனை முழுமையாக நீக்க வேண்டும் எனக் கோரி தனிநபர் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இந்த சட்டமூலத்தை முன்வைத்து உரையாற்றிய அவர் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கடந்த காலங்களில்–குறிப்பாகதமிழ்மக்களுக்கு எதிராக – தவறான கைது, நீண்டகால விசாரணையில்லா சிறைவாசம், அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாடு உண்மையான ஜனநாயகப் பாதையில் செல்ல வேண்டுமெனில், மனித உரிமைகளுக்கு முரணான இந்த சட்டத்தை உடனடியாக ரத்து செய்து, அதற்கு மாற்றாக சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்” – என்றார் சாணக்கியன் எம்.பி.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் சர்வதேச அளவில் இலங்கையின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. நல்லிணக்கம் மற்றும் இன நல்லுறவை கட்டியெழுப்ப இந்தச் சட்டம் பெரும் தடையாக உள்ளது. அரசாங்கம் இதுகுறித்து தாமதமின்றி தீர்மானம் எடுக்க வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான விவாதம் மீண்டும் அரசியல் களத்தில் தீவிரமடைந்துள்ளது. –என்றார்.

# ஜனாதிபதி முறைமைக்கு முடிவு அரசமைப்பு மேலாதிக்கமே தீர்வு

## ஜயம்பதி விக்கிரமரத்ன வலியுறுத்து




“இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முற்றாக நீக்கப்பட வேண்டும். நாம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையிள் இருந்து நாடாளுமன்ற ஜனநாயக முறைமையை நோக்கி நகர வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் இதன்போது நாடாளுமன்ற மேலாதிக்கம் உருவாவதைத் தவிர்த்து, அரசமைப்பு மேலாதிக்கமே நிறுவப்பட வேண்டும்.”

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு 2016 - 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு உருவாக்க செயன்முறையைத் தொடர்வதாக அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்தது. அந்தச் செயன்முறையைத் தொடர்வதற்கும், அதனை முன்னிறுத்திய கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் வரவேற்கத்தக்கதாகும். இருப்பினும் இந்தச் செயன்முறையில் சகல தரப்பினரும் உள்வாங்கப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

அதேபோன்று எமது நாட்டில் அரசமைப்பு சகலவற்றிலிருந்தும் மேலோங்கியதாகத் திகழ்கின்றதா என்ற கேள்வி நிலவுகின்றது. ஏனெனில் இங்கு நாடாளுமன்றம், ஆணைக்குழுக்கள், உபகுழுக்களின் தீர்மானங்களை சவாலுக்கு உட்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இருப்பினும் அண்மைய காலங்களில் மேற்கூறப்பட்ட கட்டமைப்புக்களால் அரசமைப்புக்கு முற்றிலும் விரோதமான சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நாம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் இருந்து நாடாளுமன்ற ஜனநாயக முறைமையை நோக்கி நகர வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும்.ஆனால்இதன்போது நாடாளுமன்ற மேலாதிக்கம் உருவாவதைத் தவிர்த்து, அரசமைப்பு மேலாதிக்கமே நிறுவப்பட வேண்டும்.” – என்றார்.

# கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட முதல் பெண்



இலங்கையின் 42 ஆவது கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்னவுக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளித்தார்.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளராகப் பணியாற்றிய திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்னவை இந்தப் பதவிக்கு நியமிப்பதற்கு நேற்றுமுன்தினம் அரசமைப்புப் பேரவை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியது.


இந்நாட்டின் கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட முதல் பெண், திருமதி ஜயரத்ன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகமாக பணியாற்றிய சூலந்த விக்கிரமரத்ன ஓய்வு பெற்றதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளரான திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்னவின் பெயரை, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசமைப்புப் பேரவைக்குப் பரிந்துரை செய்திருந்தார்.

கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட திருமதி ஜயரத்ன, ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியலில் இளங்கலை (சிறப்பு) பட்டம் மற்றும் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் மற்றும் அரச நிதி கணக்காளர்கள் சங்கத்தின் உறுப்பினராகவும் உள்ளார்.

# ஐ.தே.க. தலைமையில் மாற்றம் உறுதி!

## 'ஸ்மார்ட்' அரசியலுக்குப் பாதை திறந்தார் ரணில்



ஐக்கிய தேசியக் கட்சியை "ஸ்மார்ட்" அரசியலை முன்னெடுக்கக்கூடிய புதிய தலைமுறையினரிடம் கையளிக்கத் தயாராகி வருவதாக அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற 'Smart UNP' டிஜிட்டல் வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இலங்கையில் உள்நாட்டுப் போர் நிறைவடைந்த பின்னர் பிறந்த 'Zen Beta' தலைமுறை இளைஞர்களிடம் கட்சியினதும், தேசத்தினதும் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது.

எனக்கு இப்போது 70 வயதுக்கு மேல் ஆகியுள்ளது. இங்குள்ளவர்களில் பலருக்கு 70, 60 மற்றும் 50 வயதுக்கு மேல் ஆகின்றது. இனிவரும் காலம் இளைஞர்களுக்கானது.

முன்னாள் பிரதமர் டி.எஸ். சேனநாயக்க 'Baby Boomers' தலைமுறைக்காக நாட்டைத் தயார் செய்தார். ஜே.ஆர். ஜயவர்தன மில்லினியல் தலைமுறையை உருவாக்கினார். அதேபோல், நான் இந்தப் புதிய தலைமுறையிடம் அதிகாரத்தை வழங்கத் தயாராக இருக்கின்றேன்.

டொனால்ட் ட்ரம்ப்பின் புதிய உலக ஒழுங்கு, சீனா மற்றும் இந்தியாவின் எழுச்சி போன்ற சர்வதேச சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் "ஸ்மார்ட்" அரசியல் மற்றும் விர்ச்சுவல் ரியாலிட்டி போன்ற தொழில்நுட்பங்களை அரசியல் களத்தில் பயன்படுத்த வேண்டும்.

கட்சியின் புதிய கட்டமைப்புக்குள் "டிஜிட்டல் நிர்வாகி" மற்றும் "டிஜிட்டல் அமைப்பாளர்கள்" போன்ற பதவிகள் உருவாக்கப்படவுள்ளன. அத்துடன், ஸ்டார்லிங்க் தொழில்நுட்பத்தின் ஊடாக அதிவேக இணைய வசதிகள் மற்றும் டிஜிட்டல் உறுப்பினர் அட்டைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன." – என்றார்.



# நீரில் மூழ்கி இருவர் மரணம்!

இரு வெவ்வேறு பகுதிகளில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அதன்படி, அவிசாவளை – புவக்பிட்டிய பகுதியில், ஹோட்டலில் உள்ள நீச்சல் தடாகத்தில் நீராடிக் கொண்டிருந்த ஆண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

மாலபே பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் குழுவொன்றுடன், அவிசாவளை பகுதிக்குச் சுற்றுலா சென்றிருந்தார் என்றும், ஹோட்டலில் உள்ள நீச்சல் தடாகத்தில் நீராடிக்கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் அவிசாவளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், அவிசாவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சிகிரியா – திகம்பதஹ பகுதியில் உள்ள மஹா வாவியில் நீராடிக் கொண்டிருந்த ஆண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கேகாலை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நண்பர்கள் குழுவுடன் மஹா வாவியில் நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் தம்புள்ளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சிகிரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டாரவுக்கு உரிய பாதுகாப்பை உடனடியாக வழங்க வேண்டும்!

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



ஐக்கிய மக்கள் சக்தியின் அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டாரவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்காமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பான சிறப்புரிமை தொடர்பில் ஒரு பிரச்சினையை முன்வைத்த பின்னர், அது தொடர்பாக அரசு கவனம் செலுத்தாத போது தொடர்ந்து கேள்விகள் கேட்பது எதிர்க்கட்சித் தலைவராக தனது பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டார்.

ரோஹண பண்டார எம்.பிக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு இன்னும் வழங்கப்படாமையினால் அது தொடர்பாக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனவே, அனுராதபுரம் மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையிலான பாதுகாப்புப் பிரிவுகள் சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி ரோஹண பண்டார எம்.பிக்கு உரிய பாதுகாப்பைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும், இவை உட்கட்சிப் பிரச்சினைகள் என்று கூறி இப்பிரச்சினையை வேறு பக்கத்துக்குத் திசை திருப்ப அரசு முயற்சிக்கின்றது என்றும், அவருடன் எந்தவொரு கட்சிப் பிரச்சினையும் இல்லை என்றபடியால், அவருக்கு உரிய பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

---

## வெறுப்புணர்வைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமரசிங்கவால் கூட்டத்தில் வைத்து பழி வாங்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

"மணலாறு அபிவிருத்திக் குழுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நான் அந்த நேரத்தில் அங்கு சென்றிருந்தேன். கூட்டம் ஆரம்பித்து 30 நிமிடங்களின் பின்னர் பிரதேச செயலாளர் மற்றும் வவுனியா வடக்கின் தவிசாளர்களுக்கிடையில் விவாதம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இதன்போது மேடையின் முன் வரிசையில் அமரவேண்டும் எனத் தவிசாளர் கோரிக்கை விடுக்கின்றார் எனப் பிரதேச செயலாளர் என்னிடம் வந்து கூறினார். மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சின் விதிமுறைகளின் படி மேடையில் அமர்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே அனுமதி உள்ளது. இது தொடர்பாக நான் விளக்கமளித்திருந்தேன்.

இருப்பினும் வலுக்கட்டாயமாக மேலே வந்து அவர் எனக்கு அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார். நான் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் கூட்டத்தை ஆரம்பித்திருந்தேன்.

இதன்போதுமொழிபெயர்ப்புதேவையா என்று அங்கிருந்த மக்கள் மற்றும் அதிகாரிகளிடம் கேட்டிருந்தேன். அவர்கள் தேவையில்லை என்பதால் கூட்டம் அப்படியே நடத்தப்பட்டது.

இதனையடுத்து அந்தத் தவிசாளர் ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார். அவரிடம் ஒலிவாங்கி வேண்டுமா என்று கேட்டபோது அவர் கோபத்துடன் என்னிடம் இருந்து அதனை வாங்கினார். பின்னர் அவர் உரையாற்றினார்.

நெடுங்கேணியில் நடைபெற்ற கிவுல் ஓயாத் திட்டத்துக்கு எதிரான போராட்டங்கள் தொடர்பாக அவர் குறிப்பிட்டார். அதற்குத்தலைமைதாங்கியமையாலேயே தன்னை நீங்கள் பழிவாங்குகின்றீர்கள் என அவர் கூறினார். தனக்கு மேடையில் இருக்க உரிமை உள்ளது. தான் ஒரு பிரதேச சபையின் தவிசாளர் என்று கூறினார். எனக்குச் சிங்களம் தெரியாது. அனைத்துக்கும் மொழிபெயர்ப்பு வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவற்றைக் கூறிக்கொண்டு அவர் அப்கிருந்து வெளியேறியிருந்தார். நீங்கள் கூறியமைக்கு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் என்ற வகையில் நான் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கூறியபோதும் அவர் அதனைக் கேட்காமல் ஆவேசத்துடன் அங்கிருந்து சென்றுவிட்டார்.

முதலில் கூட்டத்துக்கு வருகை தரும் அனைவரும் வருகையை உறுதிப்படுத்துவதற்காகத் தங்கள் கையொப்பத்தை இடவேண்டும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. கடந்த கூட்டத்தில் பதில் கடமையில் இருந்த பிரதேச செயலாளர் ஒருவராலேயே மேலே ஆசனம் ஒதுக்கப் பட்டிருந்தது.

நான் வவுனியாவில் பிறந்தவன். தமிழ் மக்களுடன் வளர்ந்தவன். அரசியலில் சகோதரத்துவத்துடன் வேலை செய்பவன். இது வவுனியா மக்களுக்கு நன்கு தெரியும். சம்பந்தப்பட்ட தவிசாளருடன் தனிப்பட்ட எந்தக் கோபமும் எனக்கு இல்லை.

அவர் அங்கிருந்து வெளியேறிச்சென்றவுடன் முகநூலில் ஒரு பதிவைப் போட்டிருந்தார். அதாவது கூட்டத்தில் நடந்த சம்பவத்தைத் திரிவுபடுத்தி இனவாத ரீதியாக வெறுப்புணர்வைத் தூண்டும் விதமாக அவர் கருத்துக்களைப் பகிர்ந்திருந்தார்.

மேடையில் வைத்து அவரை அவமானப்படுத்தியதாகவும், அதனை விட்டு இறங்குமாறு நான் கூறினேன் எனவும் அவர் பதிவிட்டார். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான ஒரு கூற்று. நடந்த சம்பவத்தைக் கூறாமல் இல்லாத ஒன்றை அவர் திரிவுபடுத்தியிருந்தார்.

இது தொடர்பாக எனது கட்சியின் ஆலோசனையின்படி ஆளுநரிடம் ஒரு முறைப்பாட்டைச் செய்திருக்கின்றேன். எனது கோரிக்கை என்னவென்றால் நான் அவரை அவமதித்துள்ளேன் அல்லது மேடையில் இருந்து இறங்கச் சொன்னேன் என்று கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அந்த இடத்தில் ஐம்பது அரச அதிகாரிகள் இருந்தனர். அவர்களுள் தமிழ் அதிகாரிகளும் அடங்குவர். பிரதேச செயலாளர் ஒரு தமிழர். கூட்டத்தில் மொத்தமாக 150 பேர் இருந்தனர். எனவே அவர்களிடம் விசாரணை நடாத்தி நான் அவரை அவமதித்தேனா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

அத்துடன், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், ஆசனங்கள் ஒதுக்கும் விதிமுறைகள் தொடர்பாகக் கிருஷ்ணவேணிக்குத் தெரியப்படுத்துமாறு ஆளுநரிடமும் நான் கேட்டுக்கொண்டுள்ளேன்." – என்றார்.

# நட்சத்திர செவ்விந்தியனின் ‘முகாமுகம்’ நூல் வெளியீடு

நட்சத்திர செவ்விந்தியன் எழுதிய "முகாமுகம்" நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

நூல் விமர்சன உரைகளை பத்திரிகையாளர் சூரியகுமாரி சிறீதரன், எழுத்தாளர் தேவ முகுந்தன், ஆய்வாளர் தெட்சணாமூர்த்தி மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்துவர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சிக்குள் நிலவும் இழுபறி நிலைகள், குழப்பங்கள் குறித்து இரு தரப்புகளுடன் பேசி சுமுகநிலையை ஏற்படுத்தும் ஒரு திட்டம் என்ற பெயரிலேயே இந்த நடவடிக்கை நாடாளுமன்றக் குழுவால் முன்னெடுக்கப்பட்டது.

முதலில் சிறிதரனுடனும், பின்னர் சுமந்திரனுடனும் கலந்தாலோசனை நடத்த நாடாளுமன்றக் குழு தீர்மானித்து இந்த நடவடிக்கையை எடுத்ததாகக் கூறப்படுகின்றது.

கட்சிக்குள் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக கட்சியின் வழக்கு, சிக்கல்கள், அரசமைப்புக் கவுன்ஸிலில் சிறிதரனின் செயற்பாடு, சிறிதரனை நாடாளுமன்ற குழுத் தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கு அரசியல் குழு எடுத்த தீர்மானம் ஆகியவை பற்றி எல்லாம் நேற்றைய சந்திப்பில் விலாவாரியாகப் பேசப்பட்டதாக அறிய வந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேற்படி விடயங்களில் இடம் பெற்ற முழு சம்பவங்களையும் ஆதியோடு அந்தமாக சுமந்திரன் விளங்கப்படுத்தினார் எனத் தெரிய வந்தது.

நேற்றைய சந்திப்பின் போது இடையிடையே சிறிநேசனுடன் சுமந்திரன் முரண்பட்டு கருத்து மோதல் பட்டார் எனத் தெரிகிறது. எனினும் கட்சியின் நிலைமை என்ன, சிறிதரனை அகற்றிய செயற்பாடு யாது என்பவை பற்றி மிகத் தெளிவாக சுமந்திரன் விளக்கம் அளித்துள்ளார் எனக் கூட்டத்தில் பங்கு பற்றிய எம்.பி.ஒருவர் தெரிவித்தார்.

கூட்டம் ஒன்றரை மணிநேரம் நீடித்ததாகத் தெரிகிறது

* * *

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையான வழக்கு ஒன்று தொடர்பில், நீதிமன்றுக்கு வெளியில் வெளியிட்ட பகிரங்கக் கருத்து மூலம் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தை ஆளும் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் இழைத்தார் என்று தெரிவித்து, சட்டத்தரணி சுமந்திரன் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

எதிர்மனுதாரரான இளங்குமரன் தாம் இந்தியா செல்கின்றமையால், இந்த வழக்கைப் பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்குமாறு நீதிமன்றில் ஏற்கனவே மனுச் செய்திருந்தமையின் அடிப்படையில் வழக்கு பிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

* * *

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக இளம் அரசியல் தலைவரான இரா. சாணக்கியன் நியமிக்கப்பட்டமையை வரவேற்று, அவருக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கும் வகையில் வடக்கு – கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் சுவரொட்டிகள், பதாகைகள் ஒட்டப்பட்டுள்ளன அல்லது வைக்கப்பட்டுள்ளன என்று நேற்றிரவு ஆங்காங்கே இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்தப்பட்டமை தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில்உள்ளஅக்கட்சியின்தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த இவ்வாறு அதிருப்தி வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஷிரந்தி ராஜபக்ஷவை எப்.சி.ஐடிக்கும், நாமல் ராஜபக்ஷவை சி.ஐ.டிக்கும் ஒரே நாளில் – ஒரே நேரத்தில் அழைக்கின்றனர்.

ராஜபக்ஷக்களுக்கு எதிரான அரசியல் பழிவாங்கல்வேட்டையின்ஓர்அங்கம்தான் இது.

அரசு தமது இயலாமையை மூடிமறைத்துக்கொள்வதற்காகவே ராஜபக்ஷக்களை இவ்வாறு குறிவைக்கின்றது.

படையினர் போரை முடிவுக்குக் கொண்டு வந்ததால்தான் இன்று ஜனாதிபதி உட்பட நாட்டு மக்களுக்குச் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடிகின்றது.

இவ்வாறு பெரும் சேவையாற்றிய படையினரை, டித்வா புயலுடன் மட்டும் மட்டுப்படுத்துவதற்கு இந்த ஆட்சியின் கீழ் முயற்சி எடுக்கப்படுகின்றது.

இனவாதத்துக்கு இடமில்லை என ஜனாதிபதி கூறுகின்றார். இது நல்லது. ஆனால், வடக்கு, கிழக்கில் இனவாதம் தூண்டப்பட்டுள்ளது. சுதந்திர தினத்தில் அங்கு கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது. அங்கு கரிநாள் அனுஷ்டிக்கப்பட்டு பேரணி நடத்தப்பட்டுள்ளது.

எனவே, இனவாதத்துக்கு இடமில்லை எனக் கூறிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதனைச் செயலில் காட்ட வேண்டும்." – என்றார்.

## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"வெலிஓயா" எனப்படும் பிரதேச செயலாளர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை 3 ஆம் திகதி வழமைக்கு மாறாக தனிச் சிங்களத்தில் இடம்பெற்றமை தொடர்பில் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான து.ரவிகரன், மருத்துவர் ப.சத்தியலிங்கம் உட்பட தமிழரசின் எம்.பிக்களான குகதாசன், கோடீஸ்வரன், சாணக்கியன், மருத்துவர் சிறிநாத், சிறிநேசன் ஆகியோரும், வவுனியா வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணவேணியும் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் சுமந்திரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"மணலாறு பகுதிக்குரிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது. மணலாறு தற்போது வெலிஓயா எனப் பெயர் மாற்றி வைத்திருப்பது எல்லோருக்கும் தெரியும். இந்தக் கூட்டத்துக்கு வவுனியா வடக்கு பிரதேச சபை மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபை என்பவற்றின் தவிசாளர்கள் கலந்துகொள்வது வழமையானது. இக் கூட்டத்துக்கு வவுனியா வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணவேணி வழமையாகவே சமுகமளிப்பவர். இக்கூட்டத்தில் பங்குகொள்பவர்களில் அதிகமானோர் தமிழ் மக்கள். உத்தியோகத்தர்களும் அவ்வாறுதான் உள்ளனர்.

இக் கூட்டமானது இதுவரை காலமும் மொழிபெயர்ப்புடனேயே இடம்பெறுவது வழமை. இக் கூட்டம் இடம்பெற்றதற்கு முதல் நாள் கிவுல் ஓயாத் திட்டத்துக்கு எதிராக நாம் ஓர் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டமை அனைவருக்கும் தெரியும். அடுத்த நாள் இந்தக் கூட்டம் இடம்பெறுகின்றபோது வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு வழமையாக ஆசனம் ஒதுக்கும் இடத்தில் இருக்கை ஒதுக்கப்படவில்லை. அதாவது ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருடன் அமர முடியாது கீழே அமருமாறு கூறப்பட்டுள்ளது.

வழமைக்கு மாறாக மாற்ற முடியாது எனத்தெரிவித்ததவிசாளர்மேடையிலேயே அமர்ந்தார். அதன் பின்பு கூட்டமானது முழுமையாகத் தனிச் சிங்களத்தில் மட்டுமே இடம்பெற்றது. மொழிபெயர்ப்பு கேட்டபோதும் கொடுக்கப்படவில்லை. ஆகையினால் தவிசாளர் கூட்டத்தில் இருந்து வெளியேறினார்.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் சபை முதல்வர் மற்றும் அமைச்சர்கள் "நாம் இனவாதிகள் அல்லர். நாங்கள் இனவாதச் செயல்பாட்டில் ஈடுபடுவது கிடையாது, நீங்கள் நடத்திய போராட்டம் இனவாதமான போராட்டம்" என்று கூறியுள்ளனர்.

இந்தப் பின்னணியில் வவுனியா வடக்கு தவிசாளரையும் அங்குள்ள மக்களையும் புறக்கணித்து, மொழிபெயர்ப்பு இல்லாமல் தனிச் சிங்களத்தில் கூட்டம் நடத்தியமையை நாம் எப்படி வர்ணிப்பது என்பதே எமது கேள்வி. இதை இனவாதம் என்பதா அல்லது வேறு எவ்வாறு கூறுவது?

தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மொழி உரிமை முக்கியமானது, முக்கியமானது, ஒவ்வொருவரும் தங்கள் மொழியில் பேசும் உரிமை இருக்கின்றது எனத் திரும்பத் திரும்பக் கூறினார். சொல்லில் சரியாகவுள்ளது. ஆனால் நடைமுறையில் எப்படி உள்ளது? அதனால் நாம் இது தேசிய மட்டத்தில் – நாட்டில் உள்ள மக்களுக்கும் தெரியவேண்டும் என்பதற்காக இதனை வெளிப்படுத்துகின்றோம். இவர்கள் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாகவுள்ளது. மிக முக்கியமானது மொழி உரிமை எனச் சொல்லிக்கொண்டு அந்த மொழி உரிமை மறுக்கப்படுகின்றது." – என்றார்.

# சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் பொலிஸாரால் கைப்பற்றல்

சட்டவிரோத மணற்கடத்தலில் தொடர்சியாக ஈடுபட்டு வந்த ஒருவரின் டிப்பர் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கற்கோவளம் பகுதியில் மணலை அகழ்ந்து டிப்பர் வாகனத்தில் கடத்திச் செல்வதாக காங்கேசன்துறை குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கற்கோவளத்தில் இருந்து மணற் கடத்திச் சென்ற டிப்பர் வாகனத்தை நேற்று மாலை பொலிஸார் தடுத்துள்ளனர்.

பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த டிப்பர் வாகனத்தை பொலிஸார் துரத்திச் சென்று வல்லிபுரம் நாவக்கோவில் பகுதியில் வைத்து கைப்பற்றியதுடன், சாரதியையும் கைது செய்துள்ளனர்.




கைதுசெய்யப்பட்டவர் டிப்பர் வாகனத்துடன் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விசாரணை நடக்குமா?

இதுவரை ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் மீது அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளை அடுக்கி, அவற்றின் மீது தனது பிரசாரத்தை கட்டி எழுப்பி, தங்களைப் பெரும் உத்தமர்களாகக் காட்டி, அதன் மூலம் ஆட்சிக்கு வந்தது - அதிகாரத்தைக் கைப்பற்றியது - தேசிய மக்கள் சக்தி அரசு.

அதற்கு எதிராக இப்போது குற்றச்சாட்டுப் பட்டியல் நீளத் தொடங்கியுள்ளது. அவை தொடர்பில் நீதி, நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று எதிரணியின் பிரதான கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தி இருக்கின்றார்.

அரசாங்கம் முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்றும், தனது சொந்த உறுப்பினர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் நடவடிக்கை எடுக்கத் தவறினால் அதன் நம்பகத்தன்மை சரிந்து விடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

விசாரணைகள் அரசியல் எதிரிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படக் கூடாது என்றும் அவர் தமது எக்ஸ் தளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

“ரணில், நாமல் மற்றும் ஷிரந்தி ஆகியோரை விசாரியுங்கள். ஏதேனும் ஆதாரங்கள் இருந்தால் சமர்ப்பியுங்கள். வழக்குகளைத் தாக்கல் செய்து தீர்ப்புகளைப் பெறுங்கள். சட்டத்தின் ஆட்சியை அமுல்படுத்துங்கள். ஆனால் சட்டத்தின் ஆட்சியை நியாயமாகவும் வெளிப்படையாகவும் அமுல்படுத்துவது முக்கியம்.

ஊழலை எதிர்த்துப் போராடுவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மீது பல முறைப்பாடுகள் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவின் முன்பாக உள்ளன. அவை தாமதமின்றிவிசாரிக்கப்படவேண்டும்.” - என்று மனோ கணேசன் வலியுறுத்துவதில் நியாயம் முழுமையாக உள்ளது.

நூற்றுக்கணக்கான கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தி, மின் உற்பத்தி நிலையங்களை சேதப்படுத்தியதாகவும் கூறப்படும் தரமற்ற நிலக்கரியை கப்பல்களில் இறக்குமதி செய்ததாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. ஜே.வி.பி. எதிர்க்கட்சியில் இருந்த போது எதிர்த்த கேள்விப்பத்திர செயல்முறைக்கு அதன் அமைச்சரவை இப்போது ஒப்புதல் அளித்துள்ளது.

அதேவேளை, சபாநாயகரின் பல வீடுகள், வாகனங்கள், கொடுப்பனவுகள் மற்றும் நெறிமுறை நடத்தைகள் தொடர்பாக நாடாளுமன்ற பிரதி செயலாளர் பதவியில் இருந்தவர் உரிய முறைப்படி முறைப்பாடு செய்துள்ளார்.

உரிய சுங்கப் பரிசோதனைகள் இன்றி 325 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமையில் பெரும் ஊழல் இழைக்கப்பட்டுள்ளது எனக் குற்றம் சாட்டப்படுகின்றது.

“மற்றவர்களை மட்டும் குற்றம் சாட்டி ஆட்சி செய்ய முடியாது. உங்கள் சொந்த குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் விசாரிக்க வேண்டும். நம்பகத்தன்மையைப் பாதுகாக்க வேண்டும். பொறுப்புக்கூறலை நிலைநிறுத்த வேண்டும்” - என்றும் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

அது நடக்குமா? சாத்தியங்கள் ரொம்பவும் குறைவுதான்.




# மன்னார் - புத்தளம் பிரதான பாதை மூடப்பட்டால் பேரழிவு என நாடாளுமன்றில் ரிஷாத் எச்சரிக்கை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த புத்தளம் - மன்னார் பாதையைத் திறந்து மக்களுக்கு இலகுபடுத்திக் கொடுங்கள் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் அரசுக்கு நாடாளுமன்றில் வேண்டுகோளை முன்வைத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த தேர்தல்களின் போது மன்னாருக்கு வேட்பாளராக வந்த ஜனாதிபதி தாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தப் பாதையை திறந்து மக்களுக்கு வசதி செய்து கொடுப்பார் என கூறினார்.

இந்த அரசாங்கத்தின் அமைச்சராக இருக்கின்ற பிமல் ரத்நாயக்க தொடர்பில் எம்மிடத்தில் மதிப்பிருந்தது. ஆனால் இன்று அவரது பதில் அதை உடைத்து எறிந்துவிட்டது.

இந்த அரசு கொண்டு வருகின்ற அனைத்து நல்ல விடயங்களையும் நாங்கள் நேர்மையுடன் பார்த்து வந்துள்ளோம். அதற்கு எதிராக நாடாளுமன்றில் நாம் பேசியதில்லை.

ஆனால் துரதிஷ்டம் தற்போதுதான் புரிகிறது இந்த அரசும், ஜனாதிபதியும். அமைச்சர்களும், இவர்களுக்கு கீழ் வருகின்ற இரண்டு நிறுவனங்களும் இந்த புத்தளம் - மன்னார் பாதையை நிரந்தமாக மூடுவதற்க எடுத்துள்ள நடவடிக்கைகள்.

முன்னாள்ஜனாதிபதிகளானமஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இந்தப் பாதையைத் திறப்பது தொடர்பில் தூர நோக்கு சிந்தனையுடன் செயற்பட்டனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் தான் இது இழுத்து மூடப்பட்டது. அன்று வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வனவிலங்கு திணைக்களம் என்பன மக்களின் பக்கம் நின்று இந்த பாதை மக்களுக்கு பயணத்திற்காக வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் இருந்தார்கள்.

ஆனால் இன்று இந்த அரசாங்கத்தின் கீழ் அவர்கள் வெளிநாட்டு நிதிகளை அண்டி வாழும் அமைப்புக்களுடன் இணைந்து இந்த பாதையை நிரந்தரமாக மூட ஒத்துழைப்பு நல்குவது வ்ர்றும் துரோகமும்,அநியாயமாகும்.

இந்த பாதை முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல என்பதை இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும். மாறாக, தமிழர்களுக்கும், அது போன்று அனைவருக்கும் பொதுவானது. அதனை திறப்பதன் மூலம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் அனைவருக்கும் 100 கிலோமீட்டர் குறைந்த தூரத்தை கொண்டதாக இருப்பது மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியிலும் இது முக்கியமானதாகும்.

அன்று நான் அமைச்சராக இருந்த போது எடுத்த முயற்சியால் இந்த பாதையைத் திறந்து மக்களுக்கு பயண வசதிகள் செய்து கொடுத்தோம். அப்போது கூட சில பெரும்பான்மை இனவாதத்தை கொண்ட சிலர் இதற்கெதிராக செயற்பட்டமை மட்டுமல்லாமல் இலங்கையில் உள்ள பெரும்பான்மை ஊடகங்களும் இந்த பாதையை மையப்படுத்தி பல்வேறு இனவாத கருத்துக்களை விதைத்தன.

வடக்கில் வாழும் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தருவதாக கூறிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, மன்னார் காற்றாலை மின்சாரத்தை அமைக்க ஏற்பட்ட மக்கள் எதிர்ப்பை அடுத்து எம்மையும். மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலரையும் அழைத்து இந்த திட்டத்தை மட்டும் நடைமுறைப்படுத்த உதவுமாறு வேண்டினார்.

அப்போதும் நாங்கள் தெளிவாக சொன்னோம். மக்களின் விருப்பத்திற்கு எதிராக எதையும் செய்ய முடியாது என்று கூறியமயுடன், மன்னார் - புத்தளம் பாதையைத் திறந்து மக்களது அத்தியாவசிய தேவையை செய்து கொடுங்கள் என்று வலியுறுத்தினோம்.

78 ஆவது இலங்கையின் சுதந்திரத்தை அரசு கொண்டாடிய போது வடக்கிலும், கிழக்கிலும் வாழும் மக்கள் அன்றைய தினத்தை கரிநாளாகக் கொண்டாடியமையோடு, தமது எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தினர்.ஆனால் நாங்கள் உங்களிடம் நாட்டை பிரித்து கொடுங்கள் என்று கேட்கவில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

மன்னார் - புத்தளம் பாதை தொடர்பாக வன்னி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும்,புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இந்த பாதை தொடர்பில் மக்கள் கருத்துக்களை கேட்டு இந்த பாதையை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். - என்றும் ரிஷாத் பதியுதீன் கூறினார்.

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் போடப்பட்ட அந்த வழக்கின் எதிரிகளோடுன் சதிகாரர்களோடும் இந்த அரசாங்கம் இணைந்து இந்த பாதையை இழுத்து மூடுவதற்கு எடுக்கும் நடவடிக்கையானது பெரும் அழிவை தோற்றுவிக்கும் என்பதை சபையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றும் தனதுரையில் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கொழும்பு - முகத்துவாரம் பிரதேசத்தில்

# 7 வயது சிறுவன் பரிதாப மரணம்!

தொடர்மாடி குடியிருப்பின் ஏழாவது மாடியில் உள்ள சீமெந்துக் கூரை இடிந்து வீழ்ந்ததில் 7 வயது சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு - முகத்துவாரம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சிறுவன் நேற்றுமுன் தினம் புதன்கிழமை தனது பாட்டியுடன் தொடர்மாடி குடியிருப்புக்கு அருகில் நின்று கொண்டிருந்தபோது, திடீரென தொடர்மாடி குடியிருப்பின் சீமெந்து கூரை இடிந்து சிறுவன் மீது வீழ்ந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

தொடர்மாடி குடியிருப்பின் சீமெந்துக் கூரை திடீரென இடிந்து வீழ்ந்ததற்கான காரணத்தைக் கண்டறிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# இந்தியக் கடற்படையின் போர்கப்பலான ‘INS GHARIAL’ உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கையை வந்தடைந்தது

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

இந்தியக் கடற்படையின் போர்கப்பலான 'INS GHARIAL” நேற்று முன்தினம் புதன்கிழமை காலை உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கையை வந்தடைந்தது.

கடற்படை மரபுகளின்படி இலங்கை கடற்படையினர் அந்தக் கப்பலை கொழும்பு துறைமுகத்தில் வரவேற்றனர்.

இலங்கை வந்தடைந்துள்ள 'INS GHARIAL” என்ற போர்கப்பல் 124.8 மீட்டர் நீளம் கொண்டது. இந்த போர் கப்பலின் கட்டளை அதிகாரியாக கொமாண்டர் கௌரவ் திவாரி கடமையாற்றுகின்றார்.

இந்த விஜயத்தின் போது, இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டு கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட பத்து தற்காலிக பாலங்கள் (Baily Bridges) இலங்கைக்கு வழங்கப்படுகின்றன.

டித்வா புயல் பேரிடர் காரணமாக இலங்கையின் பல பகுதிகளில் சேதமடைந்த பாலங்கள் சரிசெய்யப்படும் வரை தற்காலிக போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக பேரிடர் மேலாண்மை மையத்திடம் மேற்படி தற்காலிக பாலங்கள் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

'INS GHARIAL” என்ற போர்க்கப்பல் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில், இரு நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே நல்லெண்ணத்தை மேம்படுத்துவதற்காக இலங்கை கடற்படை ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில் அதன் குழுவினர் பங்கேற்க உள்ளனர். மேலும், இலங்கையின் பல பகுதிகளுக்குச் சென்று முக்கிய இடங்களைப் பார்வையிடவும் திட்டமிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.















# முல்லை அக்கரைவெளியில் அறுவடை செய்த நெல்லை எடுத்துச் செல்ல முடியாமல் அவதிப்படும் விவசாயிகள்

## நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் கமநல சேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட, தமிழர்களின் பூர்வீக அக்கரைவெளி விவசாய நிலங்களுக்குச் செல்லும் வீதி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமையினாலும், அந்த வீதியில் அமைந்துள்ள விளாத்தியடிஇறக்கப் பாலம் உடைப்பெடுத்துள்ளதாலும் அக்கரைவெளி விவசாய நிலங்களுக்குச் செல்வதற்குரிய போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இத்தகையசூழலில்தற்போதுஅக்கரைவெளியில் அறுவடைசெய்யப்பட்ட ஐயாயிரம் வரையிலான நெல் மூடைகளை அங்கிருந்து எடுத்துச் செல்ல முடியாமல் வயல்வெளிகளிலும், வீதிகளிலும் நீண்ட நாள்களாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளமையுடன், விவசாயிகள் பெரும் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் விவசாயிகளின் முறையீட்டிற்கு அமைவாக அப்பகுதிக்குச் சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் விவசாயிகள் எதிர்நோக்கும் பாதிப்புநிலமைகள் தொடர்பில் பார்வையிட்டார். விவசாயிகள் எதிர்நோக்கியள்ள பாதிப்பு நிலமைகளைச் சீர்செய்வதற்கு தம்மால் கவனஞ் செலுத்தப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் கமநலசேவைநிலையப் பிரிவில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக அக்கரைவெளி பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப் புறக்கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளும், திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமமான தென்னமரவடி பகுதியைச் சேர்ந்த விவசாயிகளும் சுமார் 2,000 ஏக்கருற்கும் மேற்பட்ட வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அக்கரைவெளி விவசாயநிலப் பகுதிக்குச் செல்லும் வீதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாலும், அந்த வீதியில் அமைந்துள்ள விளாத்தியடி இறக்கப் பாலம் உடைப்பெடுத்துள்ளதாலும் அப்பகுதியில் நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் அறுவடைசெய்யப்படும் பெரும்போக நெல்லௌ அங்கிருந்து எடுத்துச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் குறிப்பாக 800 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களில் அறுவடை மேற்கொள்ளப்பட்ட ஐயாயிரம் வரையிலான நெல் மூடைகளை அங்கிருந்து எடுத்துச் செல்லமுடியாத நிலையில் வீதியோரங்களிலும், வயல்வெளிகளிலும் அவை அடுக்கிவைக்கப்பட்டுள்ளன.

15 நாள்கள் வரையில் அங்கு நெல் மூடைகள் இவ்வாறு அடுக்கிவைக்கப்பட்டுள்ள நிலையில் அண்மையில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் நெல்மூட்டைகள் மூழ்கிப்பாதிப்படைந்துள்ளன.

இதனால் அக்கரைவெளியில் தற்போது 200 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைவிட இன்னும் அறுவடைசெய்யவேண்டிய நிலையில் பலநூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் அக்கரைவெளியில் காணப்படுகின்றபோதும் அந்த வீதிப் பாதிப்பால் விவசாயிகள் அறுவடை செய்வதிலும் தயக்கங்காட்டி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளின் முறையீட்டிற்கு அமைவாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கொக்கிளாய் புளியமுனைப் பகுதியிலிருந்து, கொக்கிளாய் களப்பினூடாக படகில் சம்பந்தப்பட்ட அக்கரைவெளிப்பகுதிக்கு நேரடியாகச்சென்று விவசாயிகள் எதிர்நோக்கும் இடர்பாடுகள்

தொடர்ச்சி▼

















# முல்லை அக்கரைவெளியில் அறுவடை செய்த நெல்லை எடுத்துச் செல்ல முடியாமல் அவதிப்படும் விவசாயிகள்

## நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

தொடர்ச்சி▲

தொடர்பில் நேரடியாகப் பார்வையிட்டார்.

இதன்போது விவசாயிகளால் உடைப்பெடுத்துள்ள விளாத்தியடி இறக்கப் பாலம் காண்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கொண்டுசெல்லமுடியாத நிலையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல்மூட்டைகளையும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் விவசாயிகள் காண்பித்தனர்.

அதேவேளை குறித்த விளாத்தியடி இறக்கப்பாலத்தினைத் தற்காலிகமாகச் சீர்செய்து தாம் தற்போது அறுவடைசெய்யும் நெல்லை எடுத்துச்செல்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு நீண்ட நாள்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதாலும், அடுக்கிவைக்கப்பட்ட நெல் மூடைகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்ததாலும் சந்தைப்படுத்த முடியாத நிலையில் காணப்படும் தமது நெல்லிற்கு இழப்பீடுகளைப் பெற்றுத. தருவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இதன்போது விவசாயிகளால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்நிலையில் கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு உடனடியாக தொலைபேசி அழைப்பெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர் விவசாயிகளின் பாதிப்பு நிலைதொடர்பில் தெரியப்படுத்தினார். விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள சிக்கல் நிலமைகளைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார்.

இது தவிர விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள சிக்கல் நிலைகள்தொடர்பில் உரிய தரப்பினர்களது கவனத்திற்கு கொண்டுவருவதுடன், விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள பாதிப்பு நிலையை தீர்க்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்தார்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களின் வலியுறுத்தலுக்கமைய கொக்குத்தொடுவாய் கோட்டைக்கேணியிலிருந்து அக்கரைவெளி வரைக்குமான பாதையைச் சீரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், விரைவில் அந்த வீதியைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


















# சாணக்கியன் நியமனத்தை வரவேற்று முல்லைத்தீவில் நேற்றுப் பதாதைகள்

**(பா.சதீசன்)**

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக இளம் அரசியல் தலைவரான இரா. சாணக்கியன் நியமிக்கப்பட்டமையை வரவேற்று, அவருக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கும் வகையில் முல்லைத்தீவு நகர் பகுதிகளில் நேற்றுப் பதாதைகள் கட்டப்பட்டுள்ளன.

"உங்கள் செயற்பாடுகள் சமூக நலனுக்கும் அரசியல் முன்னேற்றத்திற்கும் வழிகாட்டியாக அமையட்டும்" எனும் வாசகத்துடன் அமைக்கப்பட்ட இந்தப் பதாதைகள், பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நகரின் முக்கிய பகுதிகளில் நிறுவப்பட்டிருந்தன.

இந்த வாழ்த்து பதாதை நடவடிக்கைகள் இலங்கை தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் அணியினரால் முன்னெடுக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இளம் தலைமுறையின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான ஒரு முக்கிய அடையாளமாக இரா.சாணக்கியன் அவர்களின் இந்த நியமனம் அமைந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் அவர் மக்கள் நலன் சார்ந்த அரசியல் செயற்பாடுகளை வலுப்படுத்துவார் என்ற நம்பிக்கையும் இதன்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

# 'ஸ்மார்ட்' பலகைக்கு பெற்றோரிடம் நிதி வசூலிப்பதை நிறுத்த வேண்டும்

## பிரதமர் ஹரிணி உத்தரவு



புதிய கல்வி மறுசீரமைப்புக்கு தேவையான "ஸ்மார்ட்" பலகைகளை கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு விநியோகிக்க ஆரம்பித்துள்ள நிலையில், அதற்காகப் பாடசாலை மட்டத்தில் பெற்றோரிடம் நிதி வசூலிப்பதை உடனடியாக நிறுத்துமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய கோரியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸநேற்று நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலவசக் கல்வியைக் குறைப்பதற்கோ அல்லது ஸ்ரீ ஜயவர்தன புர பல் மருத்துவ பீடத்தை மூடுவதற்கோ எந்த வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும் பிரதமர் இதன்போது கூறியுள்ளார்.

அத்துடன், 1 முதல் 5 வரையான தரங்களுக்குத் தகவல் தொழில்நுட்பம் தனிப்பாடமாகக் கற்பிக்கப்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், தொழில்நுட்ப உலகத்துடன் இணைந்து பயணிப்பதற்காக, ஒவ்வொரு வயதுப் பிரிவினருக்கும் ஏற்றவாறு தொழில்நுட்ப அறிவை வழங்குவது குறித்து நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைய கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.



# தொழுநோயாளர்கள் அதிகம் சிகிச்சை பெறும் 2 ஆவது மாவட்டமாக மட்டு. மாவட்டம் உள்ளது

**(அபு அலா)**

இலங்கையில் தொழுநோயாளர்கள் அதிகம் சிகிச்சை பெறும் நோயாளர்கள் உள்ள 2 ஆவது மாவட்டமாக மட்டக்களப்பு உள்ளதாக சுகாதார அமைச்சின் சுகாதார, மக்கள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.எம்.அர்னோல்ட் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.முரளீஸ்வரன் தலைமையில் ஆரையம்பதி பிரதேசத்தில் தொழுநோய் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு தொழுநோய் சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இதுவரை 200 தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களின் நோய் நிலைமையைச் சரியாகக் கண்டறிந்து அவற்றுக்கான சிகிச்சையை வழங்குவதுடன் இந்த நோயை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து இல்லாதொழிக்கும் நடவடிக்கையை எடுப்பதே எமது நோக்கமாகும் என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்வில் விசேட தோல் வைத்திய நிபுணர் வைத்தியர் தமிழ்வண்ணன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தொழுநோய் கட்டுப்பாட்டு வைத்திய பொறுப்பதிகாரி லுபோஜிதா கமல்ராஜ், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தவர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.














# இருவேறு பகுதிகளில் விபத்துக்கள்! இளைஞர் ஒருவர் உட்பட மூவர் பலி!!

இலங்கையில் இருவேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துக்கள் நேற்றுமுன் தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, கட்டான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்கொழும்பு – மீரிகம வீதியின் கந்தவல பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நீர்கொழும்பு நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், வீதியை கடக்கும் பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர், அதில் பயணித்த ஒருவர் மற்றும் பாதசாரி படுகாயமடைந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதன்போது, மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் பாதசாரி ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் 19 மற்றும் 46 வயதுடையவர்கள் எனவும், கட்டான, திம்பிரிகஸ்கட்டுவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கட்டான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, ஆனமடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, ஆனமடுவ – நிக்கவரடிய வீதியில் 96 ஆவது மைல்கல் அருகே இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிள், ஆனமடுவ நோக்கிச் சென்ற லொறியுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஆனமடுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர் ஆனமடுவ, பெரியதக்குளம் பகுதியை சேர்ந்த 32 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துடன் தொடர்புடைய, லொறியின் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஆனமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருள்களுடன் ஒரே நாளில் 802 பேர் கைது!



ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நாட்டில் போதைப்பொருளைத் தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்றுமுன்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் சுமார் 802 பேர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 16 பேரும், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 794 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், 6 பேர் மறுவாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப்பொருள்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபர்களிடமிருந்து, 495 கிராம் ஹெரோயின், 01 கிலோகிராம் 58 கிராம் ஐஸ், 11 கிராம் 200 மில்லிகிராம் கொக்கெய்ன், 02 கிலோகிராம் 710 கிராம் கஞ்சா, 02 கஞ்சா செடிகள், ஒரு கிலோகிராம் 42 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 464 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 395 போதை மாத்திரைகள், ஒரு கிலோகிராம் 85 கிராம் மதனமோதகம் மற்றும் 111 கிராம் மாவா போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# ஜனாதிபதிக்குத் துணிவில்லை: நாடாளுமன்றத்தில் நாமல் கருத்து



விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிராகப் போர் வீரர்கள் ஈட்டிய வெற்றியைப் பற்றிச் சுதந்திர தினத்தில் பேசுவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்குத் துணிவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், உலகின் பல நாடுகள் தங்களது சுதந்திர தினத்தில் தங்களது படைப்பிரிவுகள் மற்றும் இராணுவ அலகுகளின் வெற்றிகளைப் பெருமையுடன் பேசுகின்றன என குறிப்பிட்டார்.

முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்களின் போது பெற்ற வெற்றிகளைக் கூட அந்த நாடுகள் நினைவுகூர்கின்றன என அவர் சுட்டிக்காட்டினார்.

"தற்போதைய ஜனாதிபதி, "டிட்வா" சூறாவளியின் போது ஆயுதப் படைகள் ஆற்றிய பங்களிப்பு குறித்துப் பேசினார்.

ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராகப் போர் வீரர்கள் ஈட்டிய வெற்றிகளைப் பற்றிப் பேசுவதற்கு அவருக்குத் துணிச்சல் இல்லை," என நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், "விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றியைப் பற்றிப் பேசுவது இனவாதம் என்று அரசாங்கம் நினைத்தால், அது அவ்வாறு இல்லை. நாம்தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் புரியவில்லை," என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

# 3,000 இற்கும் மேற்பட்ட அரச பாடசாலைகளில் 10 இற்கும் குறைவான ஆசிரியர்களே உள்ளனர்



இலங்கையிலுள்ள அரச பாடசாலைகளின் தற்போதைய நிலை குறித்து தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான தரவுகள் கல்வித்துறையில் நிலவும் பாரிய இடைவெளியை வெளிப்படுத்தியுள்ளன.

திணைக்களத்தின் தரவுகளின்படி, நாடு முழுவதும் மொத்தம் 10,047 அரச பாடசாலைகள் உள்ளன.

இவற்றில் 3,065 பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை 10 இற்கும் குறைவாகவே காணப்படுகிறது.

இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால், இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளில் ஒரு தேசிய பாடசாலையும் உள்ளடங்குகின்றமையாகும்.

நாட்டின் பல பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையும் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறது.


1,645 பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை 50 இற்கும் குறைவாக உள்ளது. இதில் ஒரு தேசிய பாடசாலையும் ஏனையவை மாகாண பாடசாலைகளுமாகும்.

1,648 பாடசாலைகளில் 51 முதல் 100 வரையான மாணவர்களே கல்வி பயில்கின்றனர். இவையனைத்தும் மாகாண பாடசாலைகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் விகிதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டில் நாடு முழுவதும் 266,281 மாணவர்கள் மாத்திரமே முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கையின் கல்வித்துறையில் ஆசிரியைகள் பங்கு அதிகரிப்பு




இலங்கையின் அரச பாடசாலைகளில் பணியாற்றும் மொத்த கற்பித்தல் ஊழியர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் சீரான வளர்ச்சியைக் கண்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் 237,787 ஆக இருந்த மொத்த ஆசிரியர் எண்ணிக்கை, 2024 இல் 238,506 ஆகவும், 2025 ஆம் ஆண்டு தரவுகளின்படி 242,309 ஆகவும் அதிகரித்துள்ளது. இது 2023 முதல் 2025 வரையான காலப்பகுதியில் சுமார் 1.90 சதவீத ஒட்டுமொத்த வளர்ச்சியாகும்.

அத்துடன் கல்வித்துறையில் பெண் ஆசிரியர்களின் ஆதிக்கம் தொடர்ந்து அதிகரித்து வருவதை தரவுகள் காட்டுகின்றன. பெண் ஆசிரியர்கள்: 2023 இல் 181,217 (76.2 வீதம்) ஆக இருந்த இவர்களின் எண்ணிக்கை, 2025 இல் 186,896 (77.1 வீதம்) ஆக உயர்ந்துள்ளது.

இக்காலப்பகுதியில் ஆண் ஆசிரியர்களின் எண்ணிக்கை 56,570 (2023) இலிருந்து 55,413 (2025) ஆகக் குறைந்துள்ளது. இவர்களின் வீதம் 23.8 சதவீதத்திலிருந்து 22.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. நிர்வாக ரீதியிலான ஆசிரியர் பங்கீடு தேசிய பாடசாலைகள்: 2023 இல் 43,300 (18.2 வீதம்) ஆசிரியர்கள் பணியாற்றிய நிலையில், 2025 இல் இது 42,803 (17.7 வீதம்) ஆகக் குறைந்துள்ளது.

மாகாண சபைகளின் கீழ் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை 194,487 இலிருந்து 199,506 (82.3 வீதம்) ஆக கணிசமாக அதிகரித்துள்ளது. அத்துடன் ஆசிரியர்களின் தொழில்முறைத் தகைமைகளில் குறிப்பிடத்தக்க சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

# என்.பி.பி. அரசாங்கத்தை எளிதில் வீழ்த்த முடியாது!

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசை அவ்வளவு எளிதில் வீழ்த்தி விட முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எதிரணிகளின் ஒன்றிணைவு தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மாங்காய் மரத்துக்குக் கல் அடிப்பது போல் ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியாது.

ஆளுங்கட்சி வசம் 159 ஆசனங்கள் உள்ளன. இதனைப் பயன்படுத்தி தன்னை வலுப்படுத்திக்கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கே அரசு முற்படும். மறுபுறத்தில் எதிரணிகள் தமது கருத்துகளை முன்வைக்கும்.

எனவே, ஆட்சிக் கவிழ்ப்பு தொடர்பில் கதைக்கப்பட்டாலும் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கல்வி மறுசீரமைப்பு எனது ஆட்சிக் காலத்தில்தான் ஆரம்பமானது. நாட்டுக்குப் பொருத்தமான கல்வி மறுசீரமைப்பு அவசியம். கல்வியில் அரசியலைத் திணிக்கக்கூடாது. கல்வி மறுசீரமைப்பு என்பது பொறுப்புடன் செய்ய வேண்டிய விடயமாகும்.” – என்றார்.



# இலங்கையின் தேயிலை உற்பத்தி 2026 இல் 12 வீதம் வரை அதிகரிக்குமென எதிர்பார்ப்பு

இலங்கையின் தேயிலை உற்பத்தி 2026 ஆம் ஆண்டில் 10 வீதம் முதல் 12 வீதம் வரை வளர்ச்சியடையும் என எதிர்பார்ப்பதாக இலங்கை தேயிலை சபையின் தலைவர் டபிள்யூ.எல். பி.விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளி காரணமாக சுமார் ஒரு மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி இழப்பு ஏற்பட்ட போதிலும், சாதகமான கால நிலை தொடருமானால் 300 மில்லியன் கிலோகிராம் என்ற வருடாந்த இலக்கை அடைய முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

2025 ஆம் ஆண்டில் நாட்டின் தேயிலை உற்பத்தி 264.12 மில்லியன் கிலோகிராமாக அதிகரித்துள்ளது.

இது 2024 ஆம் ஆண்டுடன் (262.69 மில்லியன் கிலோ) ஒப்பி டும்போது 1.43 மில்லியன் கிலோகிராம் உயர்வாகும். அரசாங்கம் வழங்கிய உர மானியமே இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணம் என விஜேவர்தன சுட்டிக்காட் டினார்.

உற்பத்தி அதிகரித்த போதிலும், உள்ளீட்டு செலவுகள் அதிகரிப்பு, தேயிலை தோட்டங்களில் மறுநடுகை செய்வதில் நிலவும் தாமதம், தொழிலா ளர் தட்டுப்பாடு போன்ற முக்கிய சவால் கள் இன்னும் நீடிப்பதாக தேயிலை சபை தலைவர் தெரிவித்தார்.

இந்த காரணிகளால் 2025 இன் மூன்றாம் காலாண்டில் தேயிலை உற்பத் தியில் 8.1 வீதம் வீழ்ச்சி பதிவாகியுள்ள தாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# உள்நாட்டு மதுபானங்களின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்றில் கோரிக்கை



உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் விலை அதிகமாக இருப்பதால், நுகர்வோர் பெரும் சுமையை எதிர்நோக்குவதைச் சுட்டிக்காட்டிய நாடா ளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகு ணவர்தன, அவற்றின் விலையைக் குறைப்பது குறித்து அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரை யாற்றிய அவர், மதுபான விற்பனை மற்றும் அதன் மூலம் கிடைக்கும் வருமா னம் குறித்து பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீரவிடம் கேள்வி எழுப்பினார்.

பொதுவாக "கல்" என்று அழைக்கப் படும் சாராய போத்தல் ஒன்றுக்கு 1,832 ரூபா வரி விதிக்கப்படுகிறது.

இலங்கையில் ஒரு திருமணம் அல் லது இறுதிச்சடங்கு எதுவாக இருந்தாலும் மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் சாராயம் இதுவாகும்.

அதிக விலை காரணமாக மக்கள் தரம் குறைந்த மதுபானங்களை நாடிச் செல் கின்றனர்.

இறுதியில்சுகாதாரஅமைச்சரேஇவர்க ளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை ஏற்படும். என அவர் சுட்டிக்காட்டினார்.


உள்நாட்டு மதுபானங்களுக்கான விலை மற்றும் வரி விதிப்பு முறையை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீர, இந்தக் கோரிக்கை குறித்து அரசாங்கம் பரிசீலிக்கும் எனத் தெரிவித்தார்.

மேலும், கடந்த ஆண்டில் மதுவரி மூலம் 213.39 பில்லியன் ரூபா வரு மானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

# வாக்குறுதியளித்தபடி மூன்று ஆண்டுகளில் மின்சாரக் கட்டணம் 30 வீதம் குறைக்கப்படும்

## அமைச்சர் குமார ஜயகொடி உறுதி



வாக்குறுதியளித்தபடி அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள்மின்சாரக்கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கு மின் உற்பத்திச் செலவைக் குறைப்பது அவசியம் எனச் சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போதைய முன்னேற்றங்கள் குறித்துப் பின்வருமாறு விளக்கமளித்தார்.

"நாங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்கும்போது ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான சராசரி செலவு 37 ரூபாயாக இருந்தது. தற்போது அதனை 29 ரூபா வரை (22 சதவீதத்தால்) குறைக்க எம்மால் முடிந்துள்ளது.

ஒரு அலகு மின்சாரத்தின் உற்பத்திச் செலவை 25 ரூபா வரை கொண்டு வருவதே அரசாங்கத்தின் அடுத்தகட்ட இலக்காகும்.

மின் உற்பத்திக்கான செலவைக் குறைக்காமல் கட்டணத்தைக் குறைக்க முடியாது. தற்போது அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்கி குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் நிலையே காணப்படுகிறது. எமது திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்து, அதன் நன்மையை மக்களுக்கு வழங்குவோம். அடுத்த மூன்று ஆண்டுகளில் ஒட்டுமொத்த மின்சாரக் கட்டணத்தையும் 30 சதவீதத்தால் குறைப்போம் என்ற வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவோம்." என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஆசியாவின் மிகவும் சிறந்த மலைப்பிரதேச சுற்றுலா தலங்களில் நுவரெலியாவிற்கு இடம்




உலகின் முன்னணி டிஜிட்டல் சுற்றுலா இணையத்தளமான யுபழனய, இந்த ஆண்டிற்கான ஆசியாவின் "சிறந்த மலைப்பிரதேச சுற்றுலாத் தலங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில் இலங்கையின் மத்திய மலைநாட்டின் அழகிய நகரமான நுவரெலியா உள்வாங்கப்பட்டுள்ளது.

மில்லியன் கணக்கான சுற்றுலாப் பயணிகளால் பயன்படுத்தப்படும் Agoda இணையத்தளம், நுவரெலியாவை "குட்டி இங்கிலாந்து" எனச் சிறப்பித்துக் கூறியுள்ளது.

நுவரெலியா குறித்து அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பசுமை படர்ந்த உயர்தரத் தேயிலைத் தோட்டங்கள் மற்றும் மலைச்சரிவுகள் பயணிகளைக் கவரும் முக்கிய அம்சங்களாகும்.

காலனித்துவ காலத்து கட்டடங்கள் மற்றும் இயற்கை எழில் கொஞ்சும் சூழல் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு தனித்துவமான அனுபவத்தை வழங்குகின்றன.

இதமான மற்றும் குளிர்ச்சியான காலநிலை நுவரெலியாவின் மிகச்சிறந்த அடையாளமாகும் எனவும் தெரிவித்துள்ளது.

நுவரெலியாவுடன் இணைந்து ஆசியாவின் ஏனைய புகழ்பெற்ற மலைப்பிரதேசங்களான இந்தியாவின் சிம்லா மற்றும் மூணாறு, மலேசியாவின் கெமரன் மலைப்பகுதி, வியட்நாமின் சாபா மற்றும் டலாட், இந்தோனேசியாவின் பண்டுங், பூட்டானின் திம்பு என்பன பட்டியலிடப்பட்டுள்ளன.

39 மொழிகளில் சேவைகளை வழங்கும் Agoda இணையத்தளம், உலகின் மிகப்பெரிய சுற்றுலா இணையத்தளங்களில் ஒன்றாகும்.

இது உலகளவில் 6 மில்லியனுக்கும் அதிகமான விடுதிகள் மற்றும் தங்குமிடங்களை சுற்றுலாப் பயணிகளுக்காகப் பட்டியலிட்டுள்ளது.



# வளர்ந்த இந்தியாவை நோக்கி நாடு வேகமாக பயணிக்கிறது

## மாநிலங்களவையில் பிரதமர் மோடி உரை

இந்தியாபிரகாசமானஎதிர்காலத்தைக் கொண்டிருக்கிறது என்றும் வளர்ந்த இந்தியாவை நோக்கி நாடு வேகமாக பயணிக்கிறது எனவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் கூட்டத் தொடரை முன்னிட்டு கடந்த ஜனவரி 28 ஆம் திகதி, நாடாளுமன்றஇருஅவைகளின்கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரை நிகழ்த்தினார். அவரது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மக்களவையில் பிரதமர் மோடி உரை நிகழ்த்துவதை தவிர்த்துவிட்டார். இதையடுத்து, பிரதமர் மோடியின் பதில் உரை இல்லாமல் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மக்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், நேற்று மாநிலங்களவையில் நடத்தப்பட்ட விவாதத்தில் பங்கேற்று பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிடுகையில்,

"குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தனது உரையில், நடுத்தர வர்க்கம், கீழ் நடுத்தர வர்க்கம், ஏழைகள், கிராமங்கள், விவசாயிகள், பெண்கள், அறிவியல், தொழில்நுட்பம், விவசாயம் உள்ளிட்ட அனைத்து விஷயங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். மேலும், இந்தியாவின் முன்னேற்றத்துக்கான ஒருங்கிணைந்த குரலை நாடாளுமன்றத்தில் எதிரொலித்துள்ளார்.

நாட்டின் இளைஞர்கள் இந்தியாவின் திறனை எவ்வாறு முன்னேற்றுகிறார்கள் என்பதை அவர் விரிவாக விவாதித்துள்ளார். ஒவ்வொரு பிரிவின் திறனையும் அவர் எடுத்துரைத்துள்ளார். இந்தியாவின் பிரகாசமான எதிர்காலத்தின் மீது அவர் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார். இது நம் அனைவருக்கும் ஊக்கமளிக்கிறது.

21 ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டு முடிந்துவிட்டது, ஆனால் இந்த இரண்டாவது காலாண்டு கடந்த நூற்றாண்டில் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின் இரண்டாவது காலாண்டைப் போலவே தீர்க்கமானது. இந்த இரண்டாவது காலாண்டும் அதே அளவுக்கு சக்தி வாய்ந்ததாகவும், வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதை நோக்கி அதே வேகத்தில் முன்னேறும் என்பதையும் நான் தெளிவாகக் காண்கிறேன்.

இன்று, நாட்டின் ஒவ்வொரு நபரும் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டியுள்ளதாக உணர்கிறார்கள். இப்போது நாம் நிறுத்தவோஅல்லதுதிரும்பிப்பார்க்கவோ கூடாது. நாம் வேகமாக முன்னேறி, நமது இலக்குகளை அடைந்தாக வேண்டும். நாம் அந்த திசையில் நகர்கிறோம்.

உலகின் முக்கியப் பொருளாதாரங்களில், இந்தியா இன்று குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சியைப் பெற்று வருகிறது. விரைவான வளர்ச்சியும் குறைவான பணவீக்கமும் கொண்ட இந்த அரிய கலவையானது, நமது பொருளாதாரத்தின் வலிமைக்கும் மீள்தன்மைக்கும் ஒரு சான்றாகும்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது, இந்தியா "பலவீனமான ஐந்து" பொருளாதார நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. சுதந்திரம் பெற்ற நேரத்தில், நாம் உலகின் 6 ஆவது பெரிய பொருளாதாரமாக இருந்தோம். இருப்பினும், இடைப்பட்ட ஆண்டுகளில் ஏற்பட்ட தவறான நிர்வாகம் காரணமாக, நமது தரம் 11 ஆவது இடத்துக்குச் சரிந்தது. இப்போது, நாம் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறுவதற்கான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், உலகின் மிகவும் வளமான நாடுகள் கூட வயதாகி வருகின்றன. அவற்றின் மக்கள் தொகை நாம் முதியவர்கள் என்று அறியும் வயதை எட்டியுள்ளது. நமது நாடு வளர்ச்சியின் புதிய உயரங்களை எட்டுகிறது. அதே நேரத்தில், நமது நாடு நாளுக்கு நாள் இளமையாகி வருகிறது. இது இளம் மக்கள்தொகை கொண்ட நாடு. " என்று தெரிவித்துள்ளார்.

# வருமானத்தை மறைத்த குற்றச்சாட்டு; விஜய்யின் வழக்கின் மீது இன்று தீர்ப்பு



வருமானத்தை மறைத்ததாக இந்திய மதிப்பில் 1.50 கோடி ரூபாவை அபராதமாக வருமான வரித்துறை விதித்ததற்கு எதிராக விஜய் தொடர்ந்த வழக்கில் உயர் நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்க உள்ளது.

புலி படத்திற்கு பெற்ற 15 கோடி ரூபா வருமானத்தை கணக்கில் காட்டவில்லை என நீதிமன்றம் 1.50 கோடி இந்திய ரூபா அபராதம் விதித்திருந்தது.

இதற்கு எதிராக கடந்த 2022ம் ஆண்டில் விஜய் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.கவை விமர்சிக்க விஜய்க்கு தகுதியில்லை

## நயினார் நாகேந்திரன் ஆவேசம்

அ.தி.மு.கவை விமர்சிக்க விஜய்க்கு தகுதியில்லை என தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் ஆவேசமாக கூறியுள்ளார்.

மதுரையில் பிரதமர் மோடி பங்கேற்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் 2 ஆவது தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறுகிறது. இதற்காக மதுரை மண்டேலா நகரில் எய்ம்ஸ் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்ற இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தை தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று பார்வையிட்டார்.



பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் நடைபெறும் தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். கடந்த தேர்தலில் 525 வாக்குறுதிகளை தி.மு.க. அளித்தது. அதில் 70 வாக்குறுதிகளை கூட நிறைவேற்றவில்லை. ஆனால், மத்திய அரசு எதையும் செய்யவில்லை என தொடர்ந்து கோயபல்ஸ் பிரச்சாரம் செய்து வரும் தி.மு.கவை விரட்டி அடிக்க வேண்டும்.

5 மாதங்களுக்கு முன்பு பா.ஜ.க. கூட்டணியில் இருந்து கட்சிகள் வெளியேறுவதாகவும், தி.மு.க. கூட்டணி வலுவாக இருப்பதாகவும் கூறினார்கள். தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் அமைச்சர் பதவி கேட்கிறதா? ராகுலை கனிமொழி சந்தித்தது ஏன் என்பதை முதல்வர் ஸ்டாலினிடம் யாரும் கேட்பதில்லை.

காங்கிரஸ் கட்சியில் பூத் கமிட்டி அமைக்கக் கூட யாரும் இல்லை என தி.மு.க எம்.எல்.ஏ. பேசியுள்ளார். இது பற்றி முதல்வரிடம் யாரும் கேட்கவில்லை. எங்கள் கூட்டணியில் சிறிதாக எது நடந்தாலும் பூதாகரமாக பேசுகிறார்கள்.

பிரதமர் முன்னெடுப்பில் 23 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஐ.நா. சபைக்கு போனாலும், அயோத்திக்கு போனாலும் தமிழ் பேசுவதை பார்க்கலாம். தமிழக பட்ஜெட்டில் திருப்பரங்குன்றத்துக்கு தனியாக நிதி ஒதுக்குவதில்லை. அதுபோல்தான் மத்திய பட்ஜெட்டில் மொத்தமாக நிதி ஒதுக்கப்படும். பின்னர் அனைத்து மாநிலங்களுக்கும் பிரித்து கொடுக்கப்படும்.

பழனிசாமி முதல்வராக இருந்தபோது 11 மருத்துவக் கல்லூரி வந்தது. ஸ்டாலின் ஒரு மருத்துவக் கல்லூரி கொண்டு வந்தாரா? கேட்டால் டப்பா இன்ஜின் என்கிறார்கள். தமிழகத்தில் நடைபெறுவது கஞ்சா இன்ஜினா?

மதுரை மட்டும் குப்பையாக இல்லை. தமிழ்நாடே குப்பையாக உள்ளது. காங்கிரஸ் கட்சியால் தனியாக போட்டியிட முடியுமா? விஜய் கூட போக எவ்வளவோ பேச்சுவார்த்தை நடத்தியது காங்கிரஸ். முடியாமல் போனதால் தி.மு.க. கூட்டணியில் உள்ளது. எங்கள் கூட்டணி பொருந்தும்கூட்டணி. தி.மு.க. கூட்டணிபொருந்தா கூட்டணி.


அ.தி.மு.கவை விமர்சிக்க விஜய்க்கு ஒரு தகுதியும் இல்லை. ஒரு கவுன்சிலர் கூட ஆகவில்லை. இன்னும் விசில் அடித்துக்கொண்டிருந்தால் ஒன்றும் நடக்காது.

ராகுல் காந்தி கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது. தமிழை வைத்து பிச்சை கூட எடுக்க முடியாது என ஒருவர் பேசியதாகத்தான் நிதியமைச்சர் நிர்மலா பேசினார். அது அவரது கருத்து கிடையாது. கமல்ஹாசனுக்கு இது தெரியவில்லை.” என்று தெரிவித்துள்ளார்.

# நிக்கோலஸ் மதுரோவை நாடு கடத்த வேண்டும்

## அமெரிக்காவிடம் கோரிக்கை





வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை அர்ஜென்டினாவுக்கு நாடு கடத்துங்கள் என அந்நாட்டு நீதிமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டிற்காக வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி இருவரும் அமெரிக்கா இராணுவ வீரர்களால் சமீபத்தில் சிறைப்பிடிக்கப்பட்டு அமெரிக்காவுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

நியூயோர்க்கில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ள இருவருக்கும் எதிராக அந்நாட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டமை தொடர்பான வழக்கில் விசாரணை நடத்துவதற்காக அவரை அர்ஜென்டினாவுக்கு நாடு கடத்த வேண்டும் என்று அமெரிக்காவுக்கு அர்ஜென்டினா வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்சில் உள்ள நீதிமன்றத்தில் மனித உரிமை அமைப்புகள் வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தன.

இந்த வழக்கு விசாரணைக்காக நிக்கோலஸ் மதுரோ அர்ஜென்டினாவுக்கு நாடு கடத்தப்பட வேண்டும் என்றும் அந்நாட்டின் நீதிமன்ற நீதிபதி செபாஸ்டியன் ராமோஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இஸ்ரேலிய ஜனாதிபதியின் விஜயத்திற்கு கடும் எதிர்ப்பு

## அவுஸ்திரேலியாவில் கைது செய்ய கோரிக்கை

இஸ்ரேலிய ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் அடுத்த வாரம் அவுஸ்திரேலியாவிற்கு மேற்கொள்ளவுள்ள நான்கு நாள் விஜயத்திற்கு கடும் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

அவரை அவுஸ்திரேலியாவுக்கு வந்திறங்கியவுடன் கைது செய்ய வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை ஆணைக்குழு உறுப்பினர் கிறிஸ் சிடோட்டி வலியுறுத்தியுள்ளார்.

கடந்த டிசம்பர் 14 ஆம் திகதி சிட்னியின் பாண்டி பகுதியில் ஹனுக்கா பண்டிகையின் போது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட யூத சமூகத்தினருக்கு ஆதரவு தெரிவிப்பதற்காகவும், அஞ்சலி செலுத்துவதற்காகவுமே அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானிஸ் ஹெர்சாக்கிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.



2023 ஒக்டோபர் 7 அன்று ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு ஒட்டுமொத்த பாலஸ்தீன மக்களுமே பொறுப்பு எனக் கூறியதன் மூலம், ஹெர்சாக் இனப்படுகொலைக்குத் தூண்டுகோலாக இருந்தார் என 2025 ஆம் ஆண்டு ஐ.நா விசாரணை ஆணைக்குழு ஒன்று கண்டறிந்தது.

ஹெர்சாக்கை அழைத்தது பிரதமர் செய்த முட்டாள்தனமான தவறு எனத் தெரிவித்துள்ள மனித உரிமை சட்டத்தரணி கிறிஸ் சிடோட்டி, இந்த விஜயத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் அல்லது அவரை போர்க்குற்றங்களின் அடிப்படையில் கைது செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கைகள் குறித்துப் பதிலளித்த அவுஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் பென்னி வோங், யூத சமூகத்தின் விருப்பத்திற்கு இணங்கவே ஜனாதிபதி அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

## ஜெப்ரி எப்ஸ்டீன் விவகாரம்:

# பெரும் அரசியல் நெருக்கடியில் பிரிட்டன் பிரதமர் கீர் ஸ்டார்மர்



அமெரிக்காவின் பாலியல் குற்றவாளி ஜெப்ரி எப்ஸ்டீனுடனான நட்பு மற்றும் தூதுவர் நியமனம் தொடர்பான இரகசிய ஆவணங்களை வெளியிட பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனால், பிரதமர் கீர் ஸ்டார்மர் தலைமையிலான தொழிற் கட்சி அரசாங்கம் பெரும் அரசியல் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

பிரிட்டனின் முன்னாள் அமைச்சரான லோர்ட் மெண்டல்சன், அமெரிக்காவிற்கான பிரிட்டன் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

எனினும், ஜெப்ரி எப்ஸ்டீனுடனான அவரது நெருக்கமான நட்பு குறித்த புதிய தகவல்கள் வெளியானதை அடுத்து, கடந்த ஆண்டு அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் கீர் ஸ்டார்மர், மெண்டல்சனைத் தூதுவராக நியமித்ததற்காக பகிரங்கமாக வருத்தம் தெரிவித்தார்.

“மெண்டல்சன் தனது நட்பு குறித்து எனது குழுவினரிடம் பொய் கூறியுள்ளார். இன்று எனக்குத் தெரிந்த உண்மைகள் அன்று தெரிந்திருந்தால், அவரை அரசாங்கத்தின் பக்கமே நெருங்க விட்டிருக்க மாட்டேன்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

2008 இல் எப்ஸ்டீன் சிறுமிகளைப் பாலியல் தொழிலுக்குப் பயன்படுத்திய குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட பின்னரும், மெண்டல்சன் அவருடன் நட்பைத் தொடர்ந்துள்ளார் என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

முன்னதாக, சில ஆவணங்களை வெளியிட அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருந்தது. எனினும், எதிர்க்கட்சியினர் மற்றும் தொழிற் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்களின் கடும் அழுத்தத்தை அடுத்து, அந்த ஆவணங்களை நாடாளுமன்றக் குழுவிடம் ஒப்படைக்க அரசாங்கம் சம்மதித்துள்ளது.

மெண்டல்சன் மீது “அரசாங்க பதவியைத்தவறாகப்பயன்படுத்தியமை”தொடர்பான பொலிஸ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2009 இல் அரசாங்கத்தின் சொத்து விற்பனை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவித் திட்டங்கள் குறித்த இரகசியத் தகவல்களை அவர் எப்ஸ்டீனுக்கு முன்கூட்டியே மின்னஞ்சல் மூலம் அனுப்பினார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2003 மற்றும் 2004 காலப்பகுதியில் எப்ஸ்டீன் மூலம் மெண்டல்சனுக்கு 75,000 டொலர்கள் வழங்கப்பட்டதாக மின்னஞ்சல்கள் கூறுகின்றன. ஆனால் தமக்கு இது குறித்து எதுவும் நினைவில் இல்லை என மெண்டல்சன் தெரிவித்துள்ளார்.

“இது தேசிய பாதுகாப்புப் பிரச்சினை அல்ல, பிரதமரின் பதவி பாதுகாப்புப் பிரச்சினை” என எதிர்க்கட்சித் தலைவர் கெமி பேடனொக் விமர்சித்துள்ளார்.

பிரதமர் தெரிந்தே மெண்டல்சனை நியமித்தார் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

லோர்ட் மெண்டல்சன் தற்போது தனது நாடாளுமன்றப் பதவியைத் துறந்துள்ள நிலையில், அவரது “பிரபு” பட்டத்தைப் பறிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகப் பிரதமர் கீர் ஸ்டார்மர் உறுதிப்படுத்தியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -06.02.2026




இன்று உங்களிடம் ஆன்மீக விழிப்புணர்வு காணப்படும். இதன் மூலம் அமைதியும் உங்கள் எண்ணத்தில் தெளிவும் காணப்படும். உங்கள் வெற்றிக்கு இதுவே முதல் காரணமாக அமையும். இன்றைய நாளை சிறப்பாக்குங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முயலுங்கள்.

அன்றாடப் பணிகளைக் கூட இன்று கவனமுடன் கையாள வேண்டும். பணிகள் சிறிது அதிகமாக இருக்கும் என்பதால் நீங்கள் சிறிது பதட்டத்துடன் காணப்படுவீர்கள். பதட்டப்படாமல் அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் உள்ள தேவையற்ற தடைகளை நீக்கி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். எதைப் பற்றியாவது தெரியப்படுத்த வேண்டியிருந்தால் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும். இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினமாக இருந்தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உங்கள் கடின உழைப்பு இன்று உங்களை வெற்றி பெற்ற மனிதனாக்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புங்கள். இன்று வேலை அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் சிறப்பான திட்டத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்வீர்கள்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்துகொள்ளவும் இருவரும் அவரவர் பொறுப்பை உணர்ந்து கொள்ளவும் சில முக்கியமான விஷயத்தைப்பற்றி இன்று உங்கள் துணையுடன் பேச வேண்டியது அவசியம்.




இறை வழிபாடும் ஆன்மீக ஈடுபாடும் இன்று உங்களுக்கு வரமாக அமையும். சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லுங்கள். உங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் விரும்பியதைஅடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று மிகவும் முன்னேற்றகரமான நாள். இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு காணப்படும். குடும்ப விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் மறக்க முடியாத நாளாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும். உங்களுக்கு நீண்ட கால பயன் தரும் விஷயத்திற்கு இன்று பணம் செலவு செய்வீர்கள்.




இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சியான நாள். இன்று உங்கள் மனதில் திருப்தி நிறைந்திருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் மகிழ்ச்சி காரணமாக நீங்கள் பல மடங்கு திறனுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவீர்கள். அவருக்கு பிடித்தமானதை செய்து இருவரும் ஒன்றாக நேரம் செலவு செய்வீர்கள். இதன் மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அன்பைப் பெருக்க உதவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று பணம் அதிகமாக சம்பாதிப்பீர்கள். உங்கள் சம்பாத்தியமும் சேமிப்பும் இன்று ஏறுமுகமாக இருக்கும்.

மகிழ்ச்சி என்பது நம்முள் பிறப்பது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.




இன்று கடினமான சவால்கள் காணப்படும். நீங்கள் திறமையாக கையாள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்ப்பது நல்லது.

இன்று அதிகப்படியான பணிகள் காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க நேரும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் நேரலாம். உங்கள் பொறுமையை இழப்பீர்கள். இது உங்கள் உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற மருத்துவ செலவுகள் ஏற்படும்.

அதிக சிந்தனை காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது அமைதியாக இருப்பது சிறந்தது.




நீங்கள் இன்று உணர்ச்சிப்பூர்வமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள்ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதன் மூலம் விஷயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளாதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப்பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய கணிப்பை குறைத்துக் கொள்வதன் மூலம் உறவை மலரச் செய்யலாம்.

பண விஷயத்தில் பொறுமை தேவை சரியான நேரத்தில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.




இன்றைய நாள் சிறப்பான நாள். நீங்கள் உங்கள் செயல்களை குறித்த நேரத்துக்குள்ளோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை மேம்படுத்த நீங்கள் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் திருப்தி கிடைக்கும், தரமான பணிகளை குறித்தநேரத்தில் முடித்துக் கொடுக்க இயலும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

புதிய முதலீடுகளில் பங்கேற்பது போன்ற முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு செல்வீர்கள். அது உங்களுக்கு உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. யோகா அல்லது தியானம் மூலம் அமைதியைப் பெறலாம்.

நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பணியாற்றுவீர்கள். இதனால் பணியில் தவறுகள் ஏற்படுவது குறையும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாக பேச வேண்டும். எண்ணங்களில் தெளிவும் அதனை பேச்சில் வெளிப்படுத்துவதும் உறவில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று அதிகம் செலவாக வாய்ப்புள்ளதால் பண விஷயத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் -06.02.2026




இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று மனதில் தெளிவு வேண்டும். வருவதை எதிர்கொள்ளுங்கள். ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆறுதல் அளிக்கும்.

இன்றுவேலைகள்கூடுதலாகஇருந்தாலும் நீங்கள் சமார்த்தியமாக செயல்படுவீர்கள். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் துணையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணத்தை எவ்வாறு கையாள்வதென்று அறிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் செலவை கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிக்க இயலும்.

உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாய் இருக்க பணம் செலவு செய்ய நேரும். குழந்தைகளுக்கு வயிற்று உப்பசம் வர வாய்ப்புள்ளதால் அவர்கள் உணவில் கவனம் தேவை.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம். இன்று ஆற்றலும் உறுதியும் உங்களிடம் நிறைந்திருக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களிடம் நம்பிக்கையான அணுகுமுறை காணப்படும். அது உங்கள் பணியில் வெளிப்படும்.

நீங்களும் உங்கள் துணையும் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். அன்பின் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணம் சம்பாதிக்கும் திறமை மேம்படும். இதன் மூலம் சுதந்திரமான நிதி நிலைமையும் சுய சார்பும் காணலாம்.

இன்று உங்களிடம் நேர்மறை எண்ணம் காணப்படும். அது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.




இன்று தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வது மிகவும் அவசியம். அதன் மூலம் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கலாம்.மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. என்றாலும் பணத்தை சிறப்பாக கையாண்டால் தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்த இயலும்.

மருத்துவரை ஆலோசிப்பது சிறந்தது. பற்களுக்கு சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். கால் வலி மற்றும் கண் எரிச்சல் வர வாய்ப்புள்ளது.




இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும். யோகா மற்றும் தியானம் மூலமும் பலன் பெறலாம். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகள் அதிகம் இருப்பதாக உணர்வீர்கள். சிறந்த யுக்திகளைக் கையாண்டு கவனமுடன் பணியாற்றினால் இன்றைய செயல்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் துணையுடன் பேசும் போது வார்த்தையில் கவனம் தேவை. உங்கள் துணையுடன் ஒத்துப் போவதும் அவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் அவசியம். புரிந்துணர்வு மிகவும் அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். செலவுகளை முடிந்த அளவில் கட்டுப்படுத்தி கையிலிருக்கும் பணத்தில் சமாளிப்பது சிறந்தது.

கண்கள் மற்றும் பற்களுக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# மஹிந்தானந்தவுக்கு எதிரான வழக்கு மார்ச் 25 ஆம் திகதி வரை ஒத்திவைப்பு



முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, நலின் பெர்னாண்டோ மற்றும் விளையாட்டு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் நந்த மல்லவாரச்சி ஆகியோருக்கு எதிராக சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் முதற்கட்ட ஆட்சேபனைகள் தொடர்பான உத்தரவை எதிர்வரும் மார்ச் 25ஆம் திகதி வரை ஒத்திவைத்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி புத்திக ஸ்ரீ ராகல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிரதிவாதிகளான மஹிந்தானந்த அளுத்கமகே, நலின் பெர்னாண்டோவும் ஆகியோர் சிறைச்சாலை அதிகாரிகளால் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தனர்.

பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிகள் எழுப்பிய முதற்கட்ட ஆட்சேபனைகள் தொடர்பான உத்தரவு நேற்று அறிவிக்கப்படவிருந்த போதிலும், உத்தரவு இன்னும் தயாராக இல்லாமையால் மார்ச் 25 ஆம் திகதி உத்தரவு அறிவிக்கப்படுமென நீதிபதி தெரிவித்தார்.

2015 ஜனாதிபதி தேர்தலின் போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் அலுவலகங்களுக்கு வழங்குவதற்காக கெரம் போர்டுகள் மற்றும் டாம் போர்டுகளை இறக்குமதி செய்தமையின் ஊடாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் சட்ட மாஅதிபரால் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.